REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: மார்கழி 12உ வெள்ளி (27—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 13உ சனி (28—12—57) [இதழ் 168

சிங்கப்பூர் மேயர் செய்த புரட்சி!

சிங்கப்பூர், டிச. 26—

"நாம் இப்போது, புரட்சிகரமான ஆசியாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; எனவே சிங்கப்பூர் மக்களாகிய நாம், பிரிட்டிஷ் மேயர்களின் பல நூற்றாண்டுப் பாரம்பரியங்களைப் பின்பற்ற விரும்பவில்லை" என்று, சிங்கப்பூரின் முதல் நகரசபைத் தலைவர் ஓங் எங் காபுன் என்பார் தெரிவித்திருக்கிறார்.

வழக்கமாக 'மேயர்'கள் அணியும் ஆடையையும் அவர் அணியமாட்டார்; மேயர்கள் வசிக்கும் மாளிகையிலும் அவர் வசிக்கமாட்டார் என்று தெரிகிறது.

எதிர்காலத் திட்டம் பற்றி...

விடுதலை முகாமில் தீவிர சிந்தனை

நாகர்கள் படைவரிசையைச் சரிபார்க்கின்றனர்

புதிய ஏற்பாடு பலன் தராதென அதிகார வட்டாரம் அச்சம்

முழுச் சுதந்தரம் பெற தீவிர நாகர்கள் தயாராகின்றனர்

ஷில்லாங், டிச. 27—

சுதந்தர பூமியாக நாக நாடு மலருவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், திட்டங்க்ள்பற்றி, பிஜோவின் 'விடுதலை' முகாமில் தீவிரமாக சிந்திக்கப்பட்டு வருவதாக ஷில்லாங்கிலிருந்து செய்திகள் தரப்படுகின்றன.

'அண்மையில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட நாக மலை நிர்வாக யூனிட், பிஜோவைத் தலைவராகக் கொண்ட தீவிர நாகர்களிடை எந்தவித உற்சாகத்தையும் ஊட்டவில்லை—மாற்றத்தையும் தோற்றுவிக்கவில்லை' என்றும், புதிய ஏற்பாட்டிற்கு ஆதரவு தருவதாகக் கூறியுள்ள மிதவாதிகளைக்கூட ஒரு அளவுக்குத்தான் நம்பமுடியும் என்றும் சர்க்கார் வட்டாரங்களே கூறுகின்றனவாம்.

தீவிரவாதிகள், கடந்த சில நாட்களில், புதிய ஏற்பாடுபற்றி பலமான விவாதங்கள் நடத்தியதாகவும், 'புதிய ஏற்பாடு தங்களுக்கு உடன்பாடானதாயிருக்கமுடியாது—முழுச் சுதந்தரமே தங்கள் கோரிக்கை' என்ற முடிவே அந்தக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்டதாகவும், மீண்டும் போராட்டத்தைத் துவக்குவதற்கு சரியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாகவும் சர்க்கார் வட்டாரங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறதாம்.

தீவிரவாதிகள் இப்போது செயலற்றுக் காணப்படுவதெல்லாம், அவர்கள் தங்களது அணிகளைச் சரிசெய்து கொள்கிறார்கள்—பலப்படுத்திக்கொள்கிறார்கள் என்பதன் அறிகுறிதான் என்றும் அதிகார வட்டாரம் அஞ்சுகிறதாம்!

அசாம் மாநிலத்தில் வாழும் மலை சாதியினரில், நாகர்கள்தான் அறிவுக் கூர்மையும், அரசியல் தெளிவும் பெற்றவர்கள் என்றும், இவர்கள் இப்போது தங்களிடை நிலவிய சில்லறைச் சச்சரவுகளை எல்லாம் மறந்து ஒன்றுபட்டிருப்பது ஆச்சரியத்திற்கு உரியது என்றும் கூறப்படுகிறது.

மிதவாதிகள் எனப்படுவோரை ஓரளவுக்கே நம்பமுடியும் என்றும், புதிய ஏற்பாடு, தங்களது இலட்சிய ஈடேற்றத்திற்கு வழியாக இருக்கும் வரைதான் அவர்கள் அதனை ஆதரிப்பர் என்றும் சர்க்கார் வட்டாரம் கருதுகிறதாம்!

"நாகர்கள், பிறப்பிலேயே பெரிய போர் வீரர்கள்; கடந்த அரை நூற்றாண்டுக்காலமாக அவர்கள், நிர்வாகத்திற்கு எதிராகத் தொடர்ந்து போராடி வந்திருக்கிறார்கள்; நாகர் தலைவர் பிஜோ, வெள்ளையருக்கு எதிராக இந்தியாவின் சுதந்தரத்திற்காகப் போராடினார்; வெள்ளையர் வெளியேறியபின், நாக தேச பக்தர்களையும், முன்னாள் இராணுவ வீரர்களையும், போர்ப் பிரியம் கொண்ட நாக இளைஞர்களையும் கொண்டு ஒரு பலம் வாய்ந்த அரசியல் இயக்கத்தை, இராணுவ அடிப்படையில் கட்டி வளர்த்தார்; அந்த இயக்கம்தான் இன்று, நாகநாட்டிற்கு விடுதலை கோரி போராடிக் கொண்டிருக்கிறது"

என்று பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

'ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்'

சீக்கியர் தலைவர் தாராசிங் கருத்து

தென்னவரின் இந்தி எதிர்ப்புப் போருக்கு ஆதரவு

அமிர்தசரஸ், டிச. 25—

அகாலிதளத் தலைவரான மாஸ்டர் தாராசிங், சீக்கியர்களின் பத்தாவது மத குருவான குரு கோவிந்தசிங் பிறந்த நாள் விழாவில், இங்கு பேசும்போது, ஆங்கிலமே தொடர்ந்து இந்தியாவின் ஆட்சி மொழியாக நீடிப்பதையே தாம் விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

பஞ்சாபில் இந்திக்கு ஆதிக்கம் கோரி நடைபெறும் கிளர்ச்சியை வன்மையாகக் கண்டித்த அவர், "இந்தி வெறியர்கள் இதர இந்திய மொழிகளின் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கின்றனர்; பஞ்சாபில், பஞ்சாபி மொழி வளருவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை; இதுபோன்ற நிலைகளில், இந்தி மொழி வளரமுடியாது" என்றும் கூறியிருக்கிறார்.

"இந்தி கூடாது—ஆங்கிலமே நீடிக்கவேண்டும் என்பதற்காகப் போராடிவரும் தென்னாட்டு மக்களுக்கு எனது முழு ஆதரவும் உண்டு"

என்றும் மாஸ்டர் தாராசிங் தெரிவித்திருக்கிறார்.

விவசாய அபிவிருத்தித் திட்டங்கள்

ரூ. 82 இலட்சம் பெறுமானவை வெட்டப்பட்டனவாம்

டெல்லியில் சென்னைக்கு ஏற்பட்ட மூக்கறுப்பு

சென்னை, டிச. 26—

தமிழ் நாட்டில் 1958—59-ம் ஆண்டிற்கான விவசாயத் துறைத் திட்டங்களில் ரூ. 82-இலட்சம் பெறுமான திட்டங்களை திட்டக் குழு வெட்டிவிட்டதாம்!

மாநிலத்தின் மொத்தத் திட்டத்தை ரூ. 35·8 கோடி மதிப்பிலிருந்து ரூ. 30·5 கோடி மதிப்பாக ரூ. 5·3 கோடி பெறுமான திட்டங்களை வெட்டிக் குறைத்தது தெரிந்ததே!

சிங்காநல்லூர் ஆலையில் ஆட்குறைப்பாம்!

கோவை மாவட்டம்—சிங்காநல்லூர் கம்போடியா ஆலையில் இதுவரையில் 90 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனராம். மேலும் 251 பேருக்கு வேலையிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்று முன்னறிவிப்பு தரப்பட்டுள்ளதாம்.

இலங்கையில் பேய் மழை!

1,80,000 மக்கள் வீடிழந்து தவிப்பு

வெள்ளக் கொடுமை அதிகரிப்பு

கொழும்பு, டிச. 27—

பெருமழை பெய்த காரணத்தினால், இலங்கைத் தீவு அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாநிலங்களில் மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது.

வட மத்தியப் பகுதியில் உள்ள ஓர் நீர்த்தேக்கத்தின் கரை உடைபட்டு, வெள்ளம் பெருக்கெடுத்து நாசம் விளைவித்துள்ளது.

1,80,000 மக்கள் வீடிழந்து தவிக்கின்றனர் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

50 பேர் உயிரிழந்துவிட்டனர் என்று கணக்கெடுத்து வெளியிட்டுள்ளனர்.

'இந்தியா உதவியளிக்க வேண்டும்' என்று இலங்கைப் பிரதமர் பண்டார நாயகா அவசரமாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுவரையில் 2,50,000 வீடுகள் சேதமடைந்துவிட்டுள்ளன என்றும், பர்திரிவிலாவில் ஏற்பட்ட நிலச் சரிவில் 14 பேர் கொல்லப்பட்டனர் என்றும், மற்றொரு நிலச் சரிவில் 30 பேர் புதையுண்டனர் என்றும் வருந்தத்தக்கச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தப் பேய் மழை இன்னும் 24 மணி நேரம் நீடிக்கும் என்று வான ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

வங்கக் கடலில் உருவான புயல்

பலவீனமடைந்துவிட்டதா?

சென்னை, டிச. 27—

வங்கக் கடலில் உருவான புயலின் காரணமாக, தமிழக கடற்கரைப் பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது. சில பகுதிகளில் இரயில்பாதைகள் மூழ்கியுள்ளனவென்றும், இதனால் போக்குவரத்து ஆங்காங்கு தடைபட்டுள்ளதென்றும் தெரியவருகிறது.

சென்னைத் துறைமுகத்தில் 'எச்சரிக்கைக் கொடி' பறக்க விடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாகையிலிருந்து தென் கிழக்கில் சுமார் 150 மைல் தூரத்தில் புயல் உள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒரே இடத்தில் நிலையாக இருந்த புயல், இப்போது சற்றுப் பலவீனம் அடைந்துள்ளதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது.

பற்றுக்குறை வரவு-செலவு திட்டம்

மாநிலங்களுக்கு உதவ முடியாது என்கிறார் நிதி அமைச்சர்

சென்னை, டிச. 26—

தங்களுடைய பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டத்திற்குத் தகுந்த அளவில், மத்திய சர்க்கார் உதவி கிடைக்குமென்று மாநில சர்க்கார்கள் நினைப்பதற்கு இடமில்லையென்றும், அதற்கான திட்டமும் கிடையாதென்றும், அதேபோது, மாநிலங்கள் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டம் தயாரிப்பதைத் தடுப்பதற்குக் கூடியவரையில் மத்திய சர்க்கார் முயற்சிக்கப்போவதாகவும், நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிறார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1957—58-ம் ஆண்டில் மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் சேர்ந்து மொத்தம் ரூ. 925 கோடி செலவிட திட்டமிடப்பட்டிருந்ததென்றும், இதில் சுமார் ரூ. 860 கோடி மட்டுமே இந்த ஆண்டில் செலவாகுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

திட்டமிட்டவாறு செலவிடப்படாததற்கு முக்கிய காரணம், தொழில்நுட்பப் பயிற்சியுள்ளவர்கள் கிடைக்காததும், சில திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றும் நிலையில் இல்லாததும்தான் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மற்றும், சில மாநிலங்கள் திட்டத்திற்குத் தேவையான அளவு நிதி திரட்டாததும் ஒரு காரணமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

1958—59-ல் சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் 5 கோடி குறைக்கப்பட்டதால் எந்தத் திட்டமும் பாதிக்கப்படாது என்றும் அவர் உறுதிகூறியுள்ளார்.

திட்டத்தில் இடம் பெறுமலிருந்தாலும், உடனடியாக நிறைவேற்றப்படும் தகுதியுள்ள புதிய திட்டங்களுக்கு உதவியளிக்கப்படுமென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெய்வேலி உர உற்பத்தித் திட்டம் கைவிடப்படும் என்றிருந்த நிலைமையை மீண்டும் பரிசீலனை செய்வதாகவும், இதனை நிறைவேற்ற வெளிநாட்டவர் உதவி கிடைக்கலாமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

தென் துருவத்தில்...!

லண்டன், டிச. 27—

முதல் தடவையாகத் தென் துருவத்தில் ரஷ்ய விமானமொன்று, டிச. 22-ல் இறங்கியதாக செய்திகள் மூலம் தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—12—57 வெள்ளி

தேசாயின் நிந்தனை!

சென்னையில் நடைபெற்ற ஆட்சிமொழி மாநாட்டில் ஆங்கிலமே ஆட்சிமொழியாக நீடிக்கவேண்டும் என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கண்டு இந்தியப் பிரதமர் நேரு, தமது பதவிக்குரிய பண்பிழந்து மேற்படி மாநாட்டில் கலந்துகொண்டிருந்தவர்களை எல்லாம் இழித்தும் பழித்தும் பேசி இருக்கிறார். அதற்குக் கொஞ்சமும் குறையாத அளவில் இந்திய வர்த்தகத் தொழில் மந்திரியான மொரார்ஜி தேசாயும், பொறுப்பற்றதனமாகப் பேசி இருக்கின்றார்.

இந்தி மொழியை ஐம்பது சதவிகிதத்தினர் தெரிந்துகொண்டிருப்பதாகவும், ஆங்கில மொழியை ஐந்து சதவிகிதத்தினர் அல்லது மூன்று சதவிகிதத்தினர் மட்டுமே தெரிந்துகொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டி, ஐம்பது சதவிகிதத்தினர்களால் உணர்ந்துகொள்ளப்பட்டுள்ள இந்தி மொழிதான் பேரரசின் ஆட்சி மொழி ஆவதற்கு அருகதை உடையது என்று, தேசாய் சாதித்திருக்கிறார்.

இந்தி மொழியையும், ஆங்கிலத்தையும் உணர்ந்துள்ளவர் தொகை பற்றி அவர் குறிப்பிடும் கணக்கு சரியானதாக இருக்குமா இல்லையா என்பதே ஐயத்திற்குரியதாகும். அவர் கூற்று மெய்யானது என்றே வைத்துக்கொள்வதானாலும், இந்தி மொழியை உணர்ந்துள்ளதாகச் சொல்லப்படும் ஐம்பது சதவிகிதத்தினர், இந்தியத் துணைக்கண்டம் முழுதும் பரவலாக இருக்கின்றனரா என்றால் அதுதான் கிடையாது. எங்கோ விந்தியத்திற்கப்பால் தேசாய் குறிப்பிடும் இந்தி தெரிந்த ஐம்பது சதவிகிதத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இந்தியை புரிந்துகொள்ளமுடியாத மற்ற ஐம்பது சதவிகிதத்தினர் தெற்கிலும், வடக்கிலும், வடமேற்கிலும் உறைந்து வருகின்றனர். பின்கூறிய ஐம்பது சதவிகிதத்தினர்மீது, அவர்களுக்குள்ள இந்தி மொழி புரியாமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு, இந்தி மொழி தெரிந்துள்ள மற்ற ஐம்பது சதவிகிதத்தினர், அரசியல் துறை முதற்கொண்டு மற்றெல்லா வாழ்க்கைத் துறைகளிலும் உடனடியாக ஆதிக்கம் செலுத்துவது தேசாயாலும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

இவ்வாறு மொழியின் காரணமாக மட்டுமே குறிப்பிட்ட ஒரு பகுதி மக்கள் மற்றொரு பகுதி மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலை ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்பட்டுவிட்டால், அதிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ளுவது என்பது, ஆதிக்கத்திற்கு ஆட்பட்டுப்போனவர்களால் இலகுவில் முடியாது. பலத்த போராட்டங்களுக்குப் பிறகே விடுதலையை அல்லது சமத்துவ நிலையை, பிந்தியவர்களால், அதுவும் பல ஆண்டுக் காலத்துக்குப் பிறகேதான் பெறமுடியும்.

இந்தச் சூட்சுமத்தைத் தெளிவாக முன்னரே தெரிந்துகொண்டிருந்த காரணத்தால்தான், முன்னொருநாள் புகுத்தப்பட்ட கட்டாய இந்தியை தமிழ் மக்கள் முழுமூச்சாக எதிர்த்தனர். நூற்றுக்கணக்கானவர் சிறையும் சென்றனர்—இறுதியில் வெற்றியும் பெற்றனர். அது எப்படியோ இருக்கட்டும். நிற்க

நாட்டில் இந்தி மொழியை உணர்ந்துள்ளவர்கள் ஐம்பது சதவிகிதத்தினர் இருக்கின்றனர் என தேசாய் கூறுவது உண்மையானால், மக்கள் சபையில் ஒருவர் பேசிய இந்தி மொழியை, தம்மால் அந்த இந்தியைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று பிரதமர் நேருவே கூறி இருக்கக் காரணம் என்ன என்பது சிந்திக்கத்தக்கதாகும். இந்த ஒன்றைக் கொண்டே, தேசாயால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இந்தி மொழி தெரிந்தவர் எண்ணிக்கையின் பித்தலாட்டத்தை நாம் எல்லாம் உணர்ந்துகொள்ளலாம்.

இந்தி மொழியைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள்தான் ஐம்பது சதவிகிதத்தினர் உள்ளனர் என்று தேசாய் குறிப்பிட்டாரே அல்லாது, இந்தி எழுதப் படிக்கத் தெரிந்தவர் ஐம்பது சதவிகிதத்தினர் இருக்கின்றனர் என்று தேசாய் கூறாதது குறிப்பிடத்தக்கது.

இந்தி மொழி என ஒரே ஒரு மொழிதான் வழக்கில் இல்லை. இந்தி மொழியில் பல பிரிவுகள் இருக்கின்றன.

இந்தி மொழி தெரிந்தவர்கள் ஐம்பது சதவிகிதத்தினராக இருப்பதைக் காரணம்காட்டி, இந்தி மொழியைப் 'பொது மொழி' ஆக்குவதுதான் முறையாகும் என்று தேசாய் கூறுகிறார். அதே காரணத்தைத்தான் இந்தி 'பொது மொழி' ஆக்கப்படக்கூடாது என்பதற்கும், சென்னையில் கூடிய மாநாட்டினரும் நியாயமாகக் காட்டுகின்றனர் என்பதை தேசாய் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்குத்தான் இந்தி 'பொது மொழி'யாக ஆக்கப்படுகிறது என்று தேசாய் நியாயம் கூறுகிறார். நாட்டின் ஒற்றுமை சீர்குலைந்து போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தி 'பொது மொழி'யாக ஆக்கப்படுவதை எதிர்க்கின்றோம் என்று மாநாட்டினர் நியாயம் பேசுகின்றனர்.

மாநாட்டின் முடிவையும், மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் தாங்கள் எடுத்த முடிவிற்காகக் காட்டிய நியாயங்களையும், ஒப்புக்கொள்ளுவதும் ஒப்புக்கொள்ளாததும் வர்த்தக—தொழில் அமைச்சரான தேசாய்க்குள்ள உரிமைகளில் ஒன்றாகும். ஆனால் அதே நேரத்தில், தங்கள் கருத்தை ஒளிவுமறைவு இல்லாமல் எடுத்துக்காட்டும் உரிமை மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு உண்டு என்பதை ஏனோ அமைச்சர் தேசாயால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த உரிமையை ஏற்றுக்கொள்ளுவதுதான் எந்த ஆளும்கூட்டத்திற்கும் இருந்து தீரவேண்டிய ஜனநாயகப் பண்பாகும். இன்றைய ஆளும் கூட்டத்தினரின் தலைவராக இருந்துவரும் பண்டிதரிடமே அப்பண்பைக் காணமுடியவில்லை என்றால், ஜனநாயகப் பண்பென ஒன்று இருப்பதைத் தம் வாழ்நாளில் என்றும் செயலாற்றி அறியாத அமைச்சர் தேசாயிடம் காண்பது அரிதேயாகும்!

ஆளும் கூட்டத்தார் கொண்டுள்ள கருத்துக்கு மாறுபட்ட கருத்தை பொதுமக்கள் துணிந்து வெளிப்படையாகச் சொல்லுவதைக்கூட, இன்றைய பேரரசுத் திருக்கூட்டத்தார் தாங்கிக்கொள்ளக் கூடியவர்களாக இல்லை என்ற உண்மையை, பண்டிதர்—தேசாயின் பகட்டப் பேச்சு மெய்ப்பிக்கிறது.

ஆளவந்தார்களின் கருத்துக்கு மாறுபட்ட கருத்தைக் கூறினவர்கள் சாதாரண பொது மக்கள் அல்ல. இராசகோபாலாச்சாரியார், டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர், மிர்சா இஸ்மாயில், பேராசிரியர் இரத்தினசாமி, பொன்னம்பல தியாகராசன் போன்றவர்களின் பெயர்களைக் கேட்ட மாத்திரத்திலேயே, அவர்களுக்குள்ள முதிர்ந்த அனுபவத்தையும், இந்திய ஒற்றுமையில் அவர்களுக்குள்ள அசைக்கமுடியாத ஆழ்ந்த பிடிப்பையும் நம்மனைவராலும் தெளிவாகத் தெரிந்துகொள்ளமுடியும்.

தென்னகத்தாரின் நன்மதிப்பைப் பெற்றிருப்பவர்கள் இவர்கள். இருந்தாலும் தேசாய், இவர்களை 'சிறு துரும்பு' என எண்ணி நிந்திக்கிறார்!

இந்தியா முழுவதற்குமாக ஒரு மொழி வேண்டுமாம்

ஆங்கிலம் மிகக் குறைவான எண்ணிக்கையினருக்கே புரியுமாம்

இந்திக்கு ஆதரவு தேடும் மத்திய அமைச்சர் மொரார்ஜி தேசாயின் விதண்டாவாதம்

மதுரை, டிச. 24—

"ஆட்சி மொழிக் குழுவின் அறிக்கை பற்றி வரவேற்பு இதழில் குறிப்பிட்டிருக்கிறீர்கள்; மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள மக்கள் சபை உபகுழு, அறிக்கையை கவனமாகப் பரிசீலித்து ஒரு விவேகமான முடிவுக்கு வரும் என்று நான் உறுதிகூற விரும்புகிறேன்; ஆனால் நீங்கள், இந்தியா முழுவதுக்குமான தேவை பற்றி யோசித்தாக வேண்டும் சிலர், தவறாகக் கிளப்பிவிடுகிற உணர்ச்சிக்கும் தூண்டுதலுக்கும் செவிசாய்க்கக் கூடாது.

"இந்தியா ஒரு பெரிய நாடு; இப்போதுதான் முதன் முதலாக இந்தியா முழுவதும் ஒரே ஆட்சியின்கீழ்—சர்க்காரின்கீழ் வந்துள்ளது; இந்த நாட்டினை உறுதியானதாயும், வளமானதாயும் ஆக்கவேண்டுமானால், நாம் அனைவரும் ஒன்றுபட்டு, கூட்டாக உழைத்தாகவேண்டும்.

"எனவே, நாடு முழுவதற்குமாக ஒரு மொழி வேண்டும்; ஆனால் அந்த மொழியை, இதர வளமான மொழிகளை எல்லாம் அழித்துவிட்டு உருவாக்க நாம் விரும்பவில்லை.

"ஆனால் அதே நேரத்தில், சிலருக்குமட்டும் புரிகிற ஒரு மொழியை நாம் ஏற்கமுடியாது; பலருக்கும் புரியும் ஒரு மொழியை நாம் ஏற்றாக வேண்டும்.

"ஆங்கிலம் ஒரு வளமான மொழி என்பதில் நமக்குச் சந்தேகமே இல்லை; ஆனால் அது, மக்களில் 5 அல்லது மூன்று சதவிகிதம் பேருக்கு மட்டுமே புரிகிற ஒரு மொழியாகும். இவ்வளவு குறைவான பேர் புரிந்துகொள்வதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் பெரும் பாடுபட வேண்டியிருந்தது. அப்படியிருந்தும் அது ஒரு பொது மொழியாகவில்லை இப்போது எப்படி, அது ஒரு பொதுமொழியாகிவிட முடியும்—அதுவும், பிறமொழிகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு?"

என்று, மத்திய அமைச்சர் மொரார்ஜி தேசாய், மதுரை நகரசபை தனக்குத்தந்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டாராம்!

பல்கலைக் கழக ஊழியர் வேலைநிறுத்தம்

11 பெண்கள் கைது

ஐதராபாத், டிச. 26—

கடந்த 36 நாட்களாக வங்காளிய பல்கலைக் கழகத்தின் 4-ம் பிரிவு ஊழியர்கள், ஊதிய உயர்வு வேண்டும் என்று கோரி போராடி வருகின்றனர்.

இப்போது கல்லூரிக் கட்டிடத்தில் 27-வது அகில இந்திய பெண்கள் மாநாடு நடைபெற்று வருகிறது; இந்த மாநாடு நடைபெறும்போது கட்டிடத்திற்குள் நுழைந்த 11 பெண்களை போலீசார் ஆர்ப்பாட்டம் நடத்தியதாக கைது செய்துள்ளனர்.

மொரார்ஜி தேசாயின் கீழ்த்தரமான பேச்சு

ஆட்சி மொழி மாநாட்டு அமைப்பாளர் கண்டனம்

சென்னை, டிச. 25—

ஆட்சி மொழி மாநாட்டு முடிவுகள் பற்றி மத்திய மந்திரி மோரார்ஜி பேசியிருக்கும் கீழ்த்தரமான போக்கினை, மாநாட்டு அமைப்பாளர் எஸ். செல்லசாமி வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

அறிக்கை ஒன்றில் அவர் கூறுவதாவது:—

"மத்திய சர்க்காரில் ஒரு பொறுப்பான பதவி வகிக்கும் மொரார்ஜி தேசாய், ஆட்சி மொழி மாநாட்டு நடவடிக்கைகள் பற்றி மதுரையில் பேசும்போது, கீழ்த்தரமான வாசகங்களால், மாநாட்டில் பங்குகொண்ட முதிய அரசியல்வாதிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்; ஒரு மந்திரி பேசக் கூடாத வாசகங்கள் அவை.

"உண்மையைக் காணுவதற்கு தேசாய் அஞ்சுகிறார் என்பது வெளிப்படை; இந்தி பேசாத மக்களின பலமான உணர்ச்சிகளைக் காணும்போது அவர் ஆத்திரப்படுகிறார்.

"மாநாட்டில் கலந்துகொண்டவர்கள், மொரார்ஜி தேசாயை விட தேசாபிமானத்தில் குறைந்தவர்களல்ல.

"ஆங்கிலமே இருக்கட்டும் என்று அவர்கள் கூறியது, நாட்டின் ஒற்றுமையைக் காக்கத்தான்.

"சுதந்தரமாக விவாதிப்பதையும், வெளிப்படையாகக் கருத்தறிவிப்பதையும், அதிகாரத்திலிருப்பவர்கள் சகித்துக்கொள்ளாமற் போனால், நம்முடையதைப் போன்ற ஒரு ஜனநாயக நாட்டில் அது, மிக வருந்தப்படுவதற்குரியதாகும்."

'எல்லா தேசீய மொழிகளுக்கும் சம அந்தஸ்து வேண்டும்'

'ஆங்கிலத்தையும் அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கவேண்டும்'

கல்கத்தா, டிச. 23—

"இந்தியாவின் அரசியல் சட்டத்தில் ஆங்கிலத்திற்கும் அங்கிகாரம் வேணடும"

என்று, அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டிற்குத் தலைமைதாங்கிய டாக்டர் முல்க்ராஜ் ஆனந்த் கருத்தறிவித்திருக்கிறார்.

பஞ்சாபில் நடைபெறும் இந்தி ஆர்ப்பாட்டத்தை அவர் கண்டித்தார்; 'அது, அரசியல் நோக்கமுடையது என்பதைத் தவிர வேறென்ன?' என்று கேட்டார், அவர்.

'எழுத்தாளரும் மொழிப் பிரச்சினையும்' என்ற பொருள்பற்றிய விவாதத்தைத் துவக்கிவைத்த, பேராசிரியர் புத்ததேவ போஸ், 'நாட்டின் சட்டத்தின் முன்னால், எல்லா தேசீய மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும்' என்றும், 'ஆங்கிலத்தையும் ஒரு தேசீய மொழியாக ஆக்கவேண்டும்' என்றும் கருத்தறிவித்திருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

'ஆங்கிலம் உபயோகிப்பதற்குத் தடையேதும் கூடாது'

பஞ்சாபி எழுத்தாளர் மாநாட்டின் கருத்து

ஜலந்தா, டிச 25—

"ஏற்கனவே மிகவும் குழப்பமானதாயிருக்கும் மொழிப் பிரச்சினையை, ஆட்சிமொழிக் குழுவினசிபாரிசுகள் மேலும் சிக்கலானதாக ஆக்கியுள்ளன"

என்று, பஞ்சாபி எழுத்தாளர் மாநாடு கருத்தறிவித்துள்ளது.

"ஆங்கிலத்தை, மத்திய ஆட்சிமொழியாகத் தொடர்ந்து உபயோகிப்பதற்கு எந்த விதத் தடையும் விதிக்கக் கூடாது; இந்தியை மட்டுமே ஒரே ஆட்சி மொழியாக்குவதை அவசரப்பட்டுச் செய்யக் கூடாது"

என்றும் மாநாடு கருத்தறிவித்துள்ளது.

க. அன்பழகன்

எம்.எல்.ஏ., அவர்களுக்கு ஊராட்சி மன்றங்களின் வரவேற்பு

29—11—57 மாலை 5 மணி அளவில் திருவாரூக்கு அண்மையில் உள்ள காட்டூர் ஊராட்சி மன்றச் சார்பில் தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்களால் ஒரு புதிய பாதை திறந்துவைக்கப் பட்டது. விழாவிற்கு விளமல் ஊராட்சிமன்றத் தலைவர் திரு. இராமலிங்கம் தலைமைதாங்கினார்.

அன்பழகனார் அவர்கள், பாதையைத் திறந்துவைத்து, ஊராட்சி மன்றங்களின் கடமைகளையும், மன்றங்கட்குப் போதிய உரிமைகள் இல்லாத நிலையையும் விளக்கிப் பேசினார்.

ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கா. வை. இராமையா அவர்கள்-அன்பழகனாருக்கு வரவேற்பு இதழினை படித்து அளித்ததுடன் அனைவருக்கும் வரவேற்பும்-நன்றியும் கூறினார்.

மேட்டுப்பாளையம் :

அன்று இரவு 7-30 மணியளவில் திருத்துறைப்பூண்டி, மேட்டுப்பாளையம் ஊராட்சி மன்றத்தின் சார்பில் பேராசிரியர் அன்பழகனாருக்கு ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அண்ணா படத் திறப்பு

அவ்வமயம், மன்றத்தின் சார்பில் ஓர் வானொலி நிலயத்தையும், அண்ணா அவர்களின் படத்தையும் அன்பழகனார், அண்ணாவின் தொண்டை விளக்கிப் பேசியபின்—திறந்து வைத்தார். மற்றும், நேரு, பிரசாத், ஆச்சாரியார் படங்களும் தோழர்களால் திறந்துவைக்கப்பட்டன.

ஊராட்சி மன்றத் தலைவர் தோழர் கு. சண்முகம் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

அன்பழகனாருக்கு, மேட்டுப்பாளையம் தி. மு. க. கிளை, இளைஞர் முன்னணிக் கழகம் ஆகியவைகளும் வரவேற்பிதழ்கள் அளித்தன. பல கிளைகள் மாலைகள் அணிவித்துச் சிறப்பித்தன.

சேலம் மாவட்ட

ஆரம்ப ஆசிரியர் சங்கம்

15—12—57-ல், திரு. ஆர் நடராசம் (பிள்ளை) தலைமையில் நடைபெற்ற மாவட்ட சங்க நிர்வாகக் குழுக்கூட்டத்தில், தேர்தல் பிரயாணச் செலவு (என்.ஜி ஓ.—க்களுக்குக் கொடுத்ததைப் போல் ஆசிரியர்களுக்கும் பிரயாணப்படி கொடுக்க வேண்டும் என்பது) சம்பந்தமாக சென்னை சர்க்காருடன் பல முறை கடிதப் போக்குவரத்து நடத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருப்பது பற்றி வருந்துவதுடன் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்குமாறும், பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு அளிக்கும்பொழுது கணவன், மனைவி ஆசிரியர்களை தனித்தனியே பிரித்து அனுப்பாமல் ஒரே சமயத்திலேயே அனுப்புமாறும், நாட்டாண்மைக் கழகத் துவக்கப்பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் மீது ஏதேனும் புகார்கள் வந்தால், அவ்விடத்திற்கே சென்று விசாரித்து ஆவனசெய்ய வேண்டுமென்றும் ஆசிரியர்-மாணவர் விகிதம் 1:20 என்றே இருத்தல் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மனித உரிமைகள்

சர்வதேசப் 'பிரகடனம்' பற்றிய சில குறிப்புகள்

மனித உரிமைகளின் இலட்சியம் மனித சமுதாயத்தின் நீண்டகாலக் கனவாகும். எத்தனையோ நூற்றாண்டுகளாக பேரறிஞர்களும், கவிகளும், தத்துவ ஞானிகளும் இராஜ தந்திரிகளும் தங்கள் குறுகிய சமூகச் சூழ்நிலைகளிலிருந்து விடுபட்டு, மனித சமுதாயத்தின் ஒருமைப்பாட்டை உணர்ந்து அதைத் தங்கள் அறிவுரைகள் மூலமும் இலட்சியங்கள் மூலமும் குறிப்பிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

குலம், இனம் முதலிய வரம்புக்குட்பட்ட, குறுகிய மனப்பான்மைகள் உள்ள சூழ்நிலையில் வசித்தபோதிலும் எல்லா சமூகங்களிலுமே அந்தத் தீர்க்கதரிசிகள் மனித சமுதாயத்தை ஒரே குடும்பமாகப் பாவித்தார்கள்; அதன் சுதந்தரம், தகுதி, மதிப்பு முதலியவைகளை அங்கீகரித்துப் பாதுகாக்க வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள்.

2,500 ஆண்டுகளுக்கு முன் சீனப் பேரறிஞர் கன்பூசியஸ், 'மகத்தான பாதை அமைந்தால் வான வெளிக்குக் கீழேயுள்ள எல்லோரும் ஒரே பெரும் கூட்டாக அமையலாம்' என்று கூறியிருக்கிறார். உலக மனித சமுதாயம் ஒன்று என்ற இந்த நம்பிக்கையை மேலும் பலரும் வற்புறுத்தினார்கள்.

சர்வதேசப் பிரகடனத்தில் கண்டுள்ள மனித உரிமைகள் முக்கியமானவை; அதில் 30 பிரிவுகள் உள்ளன; அவைகளில் சிவில் அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாசார உரிமைகள் பற்றிய பிரிவுகள் இருக்கின்றன; 1, 2 பிரிவுகளில் "எல்லா மனிதர்களும் சுதந்தரமாகப் பிறக்கிறார்கள்; தகுதியிலும், உரிமையிலும் சமமாக விளங்குகிறார்கள்; அவர்களுக்கு, இந்தப் பிரகடனத்தில் கண்டுள்ள சகல சுதந்தரங்களும் உரிமைகளும் உண்டு; எந்தவிதமான வேற்றுமைகளையும் பொருட்படுத்தாமல் அவை அவர்களுக்குக் கிடைக்கவேண்டும்—அதாவது, இனம், பால், மொழி அல்லது மதம், அரசியல், அல்லது இதர அபிப்பிராயங்கள், தேசிய ரீதியான அல்லது சமுதாய ரீதியான பிறப்பிடம், சொத்து, பிறப்பு அல்லது இதர தகுதி காரணமாக வேற்றுமையின்றி அவை கிடைக்கவேண்டும்" என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பொது உரிமைகளைத் தொடர்ந்து 18 பிரிவுகள் காணப்படுகின்றன; அவைகளில் சிவில், அரசியல் உரிமைகள் விவரிக்கப் பட்டிருக்கின்றன—அதாவது, உயிரோடு வாழ உரிமை, உடலுக்கு ஆபத்தோ, கட்டுப்பாடோ இல்லாமலிருக்கும் உரிமை, எதேச்சாதிகாரமாகக் கைது செய்யப்படாமல் இருப்பதற்குள்ள சுதந்தரம், தடுப்புக் காவல் அல்லது நாடு கடத்தல் முதலியவைகளிலிருந்து பாதுகாப்பு; அந்தரங்க வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை வீடு அல்லது கடிதப்போக்குவரத்து ஆகியவைகளை மற்றவர்கள் அவர்கள் விருப்பம்போல் தலையிட்டுப் பார்த்து அந்தரங்கத்தைக் குலைக்காமல் இருப்பதற்கான சுதந்தரம், கட்டுப்பாடின்றி நடமாடவும், சரண்புகவும் சுதந்தரம், ஒரு நாட்டின் குடியுரிமை பெற சுதந்தரம், திருமண—சொத்து—சிந்தனை—மனச்சாட்சிப்படி நடக்க சுதந்தரம், மத சுதந்தரம், கருத்துச் சுதந்தரம், கருத்து வெளியிட சுதந்தரம், கழகங்கள் நடத்த—கூட்டம் நடத்த சுதந்தரம், சர்க்காரில்பங்குபெறச் சுதந்தரம், பொது சேவைகளில் சமஉரிமையுடன் பங்குபெறச் சுதந்தரம் முதலியன அவைகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், "எல்லா மக்களுக்கும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான நிர்ணய சாதனை; அவைகளையே ஒவ்வொரு சமூகத்தின் உறுப்பினரும் இலட்சியமாகக் கொண்டு முயற்சிசெய்ய வேண்டிய குறிக்கோளாகும்; இந்தச் சுதந்தரங்களையும் உரிமைகளையும் எல்லோரும் மதித்து நடப்பதற்கு அவை போதனை மூலமும், கல்வி மூலமும் ஏற்பாடு செய்யவேண்டும்" என்று பொதுச்சபை கூறியிருக்கிறது.

27-வது பகுதி 1-வது பிரிவில் கூறப்பட்டிருப்பதாவது :—"ஒவ்வொருவருக்கும் சமூகத்தின்கலாசார வாழ்க்கையில் சுதந்தரமாகப் பங்கெடுக்க உரிமை உண்டு; கலைகளில் ஈடுபட்டுக் களிக்கும் உரிமை உண்டு; விஞ்ஞான முற்போக்குகளின் பலனில் பங்கெடுக்க உரிமை உண்டு; அவைகளில் ஈடுபடவும் உரிமை உண்டு"

இத்தகைய கல்விதான் எல்லா மக்களிடையிலும் நல்லுணர்வு, சகிப்புத்தன்மை, நட்புறவு முதலியவைகளை வளர்க்க முடியும்; குறிப்பிட்ட சிலருக்கே சொந்தமாக இல்லாமல் எல்லாருக்கும் பொதுவான பரந்த உயிரூட்டமுள்ள கலாசாரத்தை வளர்க்க முடியும்; அவைதான் மனித உரிமைகள் சாசனத்தில் போற்றி வைக்கப்பட்டுள்ள இலட்சியங்கள் பரவுவதற்கும், உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் அவை கிடைப்பதற்கும், வழி செய்யமுடியும்.

முதலமைச்சரிடம்

கழகத் தோழர்கள் மகசர்

சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் அவர்களின் கோவை மாவட்ட சுற்றுப்பயணத்தின்போது 12—12—57-ல் இராசிபாளையத்தில், கழகத் தோழர்கள் அவரைச் சந்தித்து ஓர் 'மகசர்' கொடுத்தனர்.

இவ்வூர் குடிதண்ணீர் திட்டத்திற்காக அரசாங்கம் அனுமதித்த தொகையை உடனடியாகப் பயன்படுத்தவேண்டுமென்றும்; டி. டி. சி. பஸ இராசிபாளையம் வரை வந்து செல்ல ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும்; இந்த ஊரிலும், ஊரின் சுற்றுவட்டாரத்திலும் மருத்துவமனையில்லாததால் இராசிபாளையத்திற்கு மருத்துவமனையொன்று கட்டித்தரவேண்டுமென்றும்; பீடித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்றும்; முன்பு குளமாகவிருந்து இடைக்காலத்தில் தூர்ந்து, தற்போது காடு, தோட்டங்களாகவிருக்கும் ஐயனார் குளத்தை மீண்டும் கட்டித்தர வேண்டுமென்றும்; பஞ்சப் பகுதியான பல்லடம் வட்ட விவசாயிகளின் நீர்பாசனக் குறையை சிறுவாணி, குந்தாத் திட்டங்களின் மூலம் (நொய்யல் நதியில் தண்ணீர் கொண்டுவருவதால்) நீக்கவேண்டுமென்றும்; பொதுமக்கள், மாணவர்கள், வணிகர்களின் போக்குவரத்து, அஞ்சல் போக்குவரத்து ஆகியவற்றிற்கு நொய்யல் நதியில் வெள்ளம் பெருக்கெடுக்கும்போது இடையூறு ஏற்படுவதால் கோபனூர் துறையில் உள்ள பாலத்தை உயர்த்திக் கட்டுமாறும் மகசரில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

கழகத் தோழர்கள் கொடுத்த மகசரையும், இன்னும் பல மகசர்களையும் பெற்றுக்கொண்ட முதலமைச்சர், 'படித்துப் பார்த்து உங்கள் குறைகளை நிறைவேற்றுகிறேன்' என்று வாக்குறுதியளித்துச் சென்றார்.

திருமங்கலம் ஊராட்சி மன்றத்தில்

அண்ணா, இரா. நெடுஞ்செழியன் படத்திறப்பு

லால்குடி வட்டம் திருமங்கலம் ஊராட்சி மன்றத்தின் அலுவலக இல்லில் 8-12-57 மாலை 5-மணிக்கு தலைவர்கள் படத்திறப்பு விழா நடைபெற்றது அப்பொழுது முறையே அண்ணா அவர்களின் உருவப்படத்தை அன்பில்-தருமலிங்கம் அவர்களும், திருவள்ளுவர் படத்தை புலவர் அரங்கசாமி அவர்களும்; இரா. நெடுஞ்செழியன் அவர்கள் படத்தை கே. ஆர். பி. மணிமொழியன் அவர்களும் மு. கருணாநிதி படத்தை பராங்குசம் அவர்களும்; முதலமைச்சர் காமராசர் அவர்கள் படத்தை தி. அ. வீரமுத்து அவர்களும் திறந்து வைத்து, தலைவர்களின் சிறந்த தொண்டினையும், அவர்கள் நாட்டிற்குச்செய்யும் நற்பணிகளையும் திருக்குறளின் மேன்மை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

சென்னை 12-வது வட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

அண்ணா, என். சீவரத்தினம், வி. முனுசாமி கலந்துகொண்டனர்

சென்னை, டிச. 25—

சென்னை 12-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில் 21—12—57 மாலை ஹார்பர் அருகிலுள்ள வேலாயுதம் சந்தில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சென்னை நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் வி. முனுசாமி அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, கழகக் கொள்கைகளையும், இன்றைய அரசியல் நிலையையும் விளக்கினார்.

தோழர்கள் என். இராமதாஸ், இராசரத்தினம், கே.எஸ். புகாரி, தமிழழகன் ஆகியோர் கழகஇலட்சியங்களை விளக்கியும், இந்தித் திணிப்பைக் கண்டித்தும் உரையாற்றினார்கள்.

அடுத்து, தோழர் என். சீவரத்தினம் அவர்கள் பேசுகையில், கழகம் பொதுமக்களுடைய பேராதரவுடன் விரைந்து வளர்ச்சியடைந்து வருவதைக் குறிப்பிட்டு விட்டு, இன்றைய ஆட்சியாளரின் போக்கையும், அண்மையில் பண்டித நேரு தமிழர்களை இழிவாகப் பேசியதையும் வன்மையாகக் கண்டித்தார்.

இறுதியாக அண்ணா அவர்கள் நேருவின் பேச்சைக் கண்டித்தும், தி.க.—தி மு க. ஆகிய இரு கழகங்களின் நிலைகளை விளக்கியும், பெரியாரைச் சிறைப்படுத்தியுள்ள சர்க்காரைக் கண்டித்தும், பெரியாரை உடனடியாக நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டுமென்றும் சுமார் ஒரு மணி நேரம் விளக்கவுரையாற்றினார். பேச்சு விவரம் முன்பே வெளியாகியுள்ளது.

அண்ணா அவர்களுக்கு 12-வது வட்ட தி. மு. க. கிளை, மஜீத் மன்றம், கலைவாணர் கலைக் கழகம், ஸ்டூடண்ட்ஸ் பாக்குத்தூள்தொழிலாளர்கள் சங்கம், என்.எஸ்.கே. நினைவு மன்றம், மற்றும் பல கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன; மற்ற பேச்சாளர்களுக்கும் கைத்தறியாடைகள் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில், அண்ணா அவர்களால் தோழர் இலட்சுமணனின் ஆண் குழந்தைக்கு 'அன்பழகன்' என்றும், தோழர் ஜி. பெருமாள் குழந்தைக்கு 'மதியழகன்' என்றும், தோழர் மு. சு. மணியின் ஆண் குழந்தைக்கு 'செங்குட்டுவன்' என்றும், பாண்டிச்சேரி தோழர் வி. தர்மலிங்கம் குழந்தைக்கு 'பாண்டியன்' என்றும், தோழர் இராசுவின் பெண் குழந்தைக்கு 'செந்தாமரை' என்றும் பெயரிடப்பட்டது.

கூட்டத்தில் 12-வது வட்ட தி. மு. க. கிளையின் செயற்குழு உறுப்பினர் தோழர் முடியரசன் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத் துவக்கத்தில் டேப்-இராதாமாணிக்கமும், செல்வி கமலாவும் இயக்கப்பண் பாடினர்.

இந்தியாவில்

க்ஷயநோய் மரணவிகிதம்

50ஆண்டுக்குமுன் மேனாடுகளில் இருந்த நிலையில் உள்ளதாம்

க்ஷயநோய் சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்துவருகிற ஒரு நோயாகும்; ஆனால், இந்நோய்க்கு மூலகாரணமான 'ட்யூபர்கின் பாசில்லி' என்னும் கிருமி பற்றி 19-வது நூற்றாண்டின் இறுதியில் தான் அறிகொள்ளப்பட்டது.

உலகம் முழுவதிலும் பி. சி. ஜி. ஊசி குத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இப்போது 18-கோடிக்கும் அதிகமாகி விட்டது.

இந்தியாவில் நிமிடத்திற்கு ஒருவர் வீதம் க்ஷயநோயால் மரணமடைகிறார்; 150 பேருக்கு ஒருவர் வீதம் அந்நோயினால் பாதிக்கப் பட்டுள்ளனர். இந்நோயினால் ஆண்டுதோறும் சுமார் ரூ. 200 கோடியும் 90-100 கோடி நபர்—நாட்களும் நஷ்டமேற்படுகிறது.

1957 செப்டம்பர் 30-ந்தேதி வரையில், சுமார் 9,64,00,000 மக்களுக்கு க்ஷயநோய் பரிசோதனை நடத்தப்பட்டது; சுமார் 3,38,00,000 பேருக்கு பி. சி. ஜி. ஊசி குத்தப்பட்டது.

க்ஷயநோய் குணப்படுத்த முடியாத நோய் என்று முன்பு கருதப்பட்டது; ஆனால் இப்பொழுது அதை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தி சிகிச்சை செய்யலாம் என்று தெரியவந்திருக்கிறது. என, டாக்டர் பி. வி. பெஞ்சமின் என்பவர் கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேல் நாடுகளில் க்ஷயநோயால் ஏற்படுகிற மரணவிகிதம் மிக மிகக்குறைந்துவிட்டது. 50 ஆண்டிற்குமுன் இலட்சம் மக்களுக்கு 200 பேர் வீதம் மரணம் அடைந்திருக்க இப்போது 4-20 வீதம் பேர்தான் மரணமடைகிறார்கள்.

வாழ்க்கைத்தர உயர்வும், சுகாதார முறைகள் அபிவிருத்தியும் இதற்குப் பொதுவான காரணமாகும். க்ஷயநோயைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பதும் சுலபமாகியிருக்கிறது; சமீப காலங்களில் நுண்கிருமி எதிர்ப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை செய்யப்படுவதால் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. வியாதி ஏற்படாமல் உடலுக்கு வலுவூட்டலாம் என்றும் தெரியவந்திருக்கிறது.

இந்தியாவில் க்ஷயநோய் சம்பந்தமாய் இன்றுள்ளநிலை, மேனாடுகளில் 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையாகும்.

இந்தியாவில் க்ஷயநோய் தடைக்கான திட்டத்தில் பின்வரும் திட்டங்கள் அடங்கியிருக்கின்றன :—1961-க்குள் சுமார் 17 கோடி பேருக்கு-வியாதி எளிதில் பீடிக்கிறவர்களுக்கு பி.சி.ஜி. ஊசி குத்தும் முறையைக் கையாள்வது சுமார் 200 புதிய கிளினிக்குகளை ஏற்படுத்துவது; மருத்துவக் கல்லூரிகளில் 10 பயிற்சி நிலையங்களை அதிகப்படியாக அமைப்பது; 10,000 படுக்கைகளை அதிகப்படியாக ஏற்படுத்துவது; சிகிச்சைபெற்றவர்களுக்கு 8 சீரமைப்பு நிலையங்களை ஏற்படுத்துவது ஆராய்ச்சிகளைப் பரவலாக்குவது.

20-வயதுக்குட்பட்ட 17 கோடி பேருக்கு ஊசி குத்தும் முறை தேவை. 1951-ல் எல்லா மாநிலங்களிலும் பெருவாரியாக இவ்வியக்கம் துவங்கப்பட்டது இந்தியாவில் குறிப்பிட்ட ஒரு வியாதிக்காக நாடு முழுவதும் நடத்தப்படும் முதலாவது இயக்கம் இது தான்.

வாழ்க்கைத்தரம் உயர்ந்தால்தான் இந்நோய் குறையும்.

வல்லம் பிராந்திய

தபால்காரர் சங்கக் கூட்டம்

8—12—57 மாலை 3-மணியளவில், தஞ்சையை அடுத்த பள்ளியக்கிரகாரத்தில் மேற்படி சங்கக் கூட்டம் திரு. பாப்ஜான் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் பலர் 'சங்கமும் நமது கடமையும்' என்பதுபற்றிப் பேசினர்.

பிறகு 6-30 மணியளவில் திரு. லூர்துசாமி (பிள்ளை) தலைமையில் கமிட்டிக்கூட்டம் நடைபெற்றது நாகர்கோயிலில் நடைபெறவிருக்கும் சங்க மாநாட்டிற்குத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன; மாநாட்டிற்குப் பிரதிநிதிகள்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஊர் சுற்றி வந்தால் மக்கள் படும் வேதனை அறிய முடியுமா?

பண்டிதரின் செல்வாக்கு நாளுக்குநாள் மங்குவதேன்?

சாதியை ஒழிக்க அவர் தரும் திட்டம்தான் என்ன?

சென்னைப் பொதுக்கூட்டத்தில் அண்ணா எழுப்பிய வினா

சென்னை—12-வது வட்ட தி. மு. க. சார்பில் 21—12—57-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் மற்றொரு பகுதி இங்கு தரப்படுகிறது.

"பெரியார் காந்தி சிலையை உடைப்பதாகக் கூறுகிறார் என்றால், ஏன் அப்படிக் கூறுகிறார்? காந்திமேல் அவருக்குள்ள வெறுப்பாலா கூறுகிறார்? இதை நன்கு சிந்திக்க வேண்டும். காந்தி சிலையை உடைப்பதன் மூலமாவது சாதியை ஒழிக்க சர்க்கார் கவனத்தைத் திருப்பலாம் என அவர் கருதுகிறார்.

"பெரியாரும் சாதி ஒழிய வேண்டும் என்றுதான் கூறுகிறார்; பண்டித நேருவும் சாதி ஒழிய வேண்டும் என்றுதான் கூறுகிறார். இப்படி இருவரும் ஒரே கருத்தைச் சொல்லும் போது, பெரியாரைச் சந்தித்து நேரு பேசினால் என்ன? 'பெரியாரைப் பார்க்கமாட்டேன்' என்று நேரு சொன்னால், பிறகு வேறு யாரைப் பார்த்துப் பேசி, சாதியை அவர் ஒழிக்கப் போகிறார்? சங்கராச்சாரியாரைச் சந்தித்துப் பேசியா சாதியை ஒழித்துவிட முடியும் என்று கருதுகிறார்?

"சாதி ஒழிய வேண்டுமென்று நேரு சொல்லிய பிறகு, 'சாதியை ஒழிக்க பெரியாரின் முறை கூடாது' என்று மட்டும் சொன்னால் போதுமா?

"'இந்தக் கடையில் சாமான் வாங்குவது சரியில்லை; கூடாது' என்று சொன்னால், பிறகு வேறு எங்கே வாங்குவது? வேறு ஒரு கடையைக் காட்டு!

"சாதியை ஒழிக்க நேரு காட்டும் முறைதான் என்ன?

"முகம்மது நபி, மக்களுக்கு ஒரு வழியைக் காட்டினார். அவருடைய இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தவர்களுக்கு சாதி இல்லை. நேற்றுவரை இந்துவாக இருப்பவன் இன்று இஸ்லாத்தில் சேர்ந்தால் அவன் சாதியற்றவனாகிவிடுகிறான்.

"இதைப்போல, நேரு என்ன திட்டம் தருகிறார்? எங்கே வைத்திருக்கிறார், திட்டம்? இங்கு வந்து பெரியாரையும் திட்டிவிட்டு, 'சாதி கூடாது' என்றும் பேசிவிட்டுச் சென்ற நேரு, ஏதாவது ஒரு திட்டத்தைத் தந்துவிட்டுப் போனார் என்றால், 'அவர், உள்ளபடியே அறிவாளி; உலகம் போற்றும் போறிஞர்' எனலாம்!

"போனதடவை அவர் இங்கு வந்தபோதும் நம்மையும் திட்டிவிட்டுப் போனார்; பேச்சோடு பேச்சாக, 'நாட்டுப் பிரிவினை கேட்பவர்கள் முட்டாள்கள்' என்றெல்லாம் மட்டரகமாகத் திட்டினார்.

"இவர் இங்கு என்ன பாஷையில் பேசுகிறாரோ, அதே பாஷையில்தான், இங்கிலாந்தில் முன்பு சர்ச்சில் காந்தியாரைப் பற்றிப் பேசினார். அக்கிரமத்தின் உச்ச நிலையிலுள்ள யாரும் எந்தப் பாஷையில் பேசுவார்களோ அந்தப் பாஷையில்தான், நேருவும் பேசிவருகிறார், இப்பொழுது!

"வட்டமேஜை மாநாட்டுக்கு இங்கிலாந்துக்குச் சென்றிருந்த காந்தியார், தான் அணிந்திருந்த அரை ஆடையுடனேயே பிரிட்டிஷ் மன்னரைப் பார்க்கச் சென்றபோது, சர்ச்சில் திமிருடன் சொன்னார்—"இந்த அரையாடை 'பக்கிரி'யை உள்ளே விடக்கூடாது"—என்று!

"சர்ச்சில் அப்படிச் சொன்னதைக் கேட்ட எவரும், சர்ச்சிலை அறிவாளி என்று சொன்னார்கள்? 'மண்டைக்கர்வம் பிடித்தவன், சர்ச்சில்' என்றுதான் சொன்னார்கள்!

"இப்பொழுது அதே இங்கிலாந்து இராணி சொல்லுகிறார்—'நேரு கொண்டுவரும் மாம்பழம் ஒரு தனி ருசியாக இருக்கிறது'—என்று! இவரும், இங்கிலாந்திற்குப் போகும்போதெல்லாம் மாம்பழம் கொண்டுபோகாமல் விருப்பதில்லை.

"இந்த நேருவும் சர்ச்சிலைப் போலத்தான்—ஆணவக்காரர்களின் பாஷையில் நான் பேசியிருக்கிறார்!

"பெரியாரின் முறை எனக்குப் பிடிக்கவில்லை' என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது; வேறு நல்ல வழியைக் காட்டு! ஏன் சட்டம் போடக் கூடாது? காட்டுமிராண்டி என்று கூறவேண்டுமா?

"சாதியை ஒழிக்க ஒரு திட்டவட்டமான முறையைச் செய்யுங்கள்; அதைச் செய்யும் வரை, அதைச் சொல்லுபவர்களைச் சிறையில் போடுவது என்பது கொடுங்கோலாட்சிகூட அல்ல—காட்டுமிராண்டி ஆட்சி என்றுதான் சொல்ல வேண்டும். எனவே, மீண்டும் சென்னைக்கு வருகிற நேரு, சாதியை ஒழிப்பதற்கு, தான் வைத்திருக்கும் முறையைச் சொல்லிக்காட்ட வேண்டும்.

"பண்டித நேருவின் புகழ் நாளுக்கு நாள் மங்கிவருகிறது. தெருக்கூத்திலே வேடம் போட்டு ஆடுபவர்களின் முகம் இரவில் மிக நன்றாக இருக்கும்; பொழுது விடிய விடிய பவுடரெல்லாம் உதிர்ந்துபோய், முகம் கருத்துவிடும்; அதைப்போல, நேரு பூசியிருக்கும் 'அரிதாரம்' கலைந்து கீழேவிழும் பருவம் இது! முகம் கருப்பாகுமுன்பாக, தன் வேடத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்! இன்றைக்கு, 'அவர் வார்த்தையைக் கேட்கமாட்டோம்' என்று கூறுபவர்கள் காங்கிரஸ் கமிட்டியிலேயே இருக்கிறார்கள்!

"அவர் வார்த்தையைக் கேட்ட பிறகுதான் கேரளத்தில் நம்பூதிரிபாட் ஆட்சி அமைந்திருக்கிறது! அவர் வார்த்தையைக் கேட்ட பிறகுதான் மராட்டியத்திலே — குஜராத்திலே — ஒரிசாவிலேயெல்லாம் எதிர்ப்புக் குரல்கள் கிளம்பியிருக்கின்றது!

"ஆகையால் அவர் செல்வாக்கு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

"நாட்டைச் சுற்றிச் சுற்றிக் கொண்டே வருவதால் நேருவுக்கு இதை அறிய முடியவில்லை

"25 வயதுப் பையன் தகப்பனார் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணத்திலிருந்து ரூ 12 கொடுத்து பேனா வாங்குவான்; ஆடம்பர செலவுகள் செய்வான்; ஊரைச் சுற்றிக்கொண்டு வீட்டிற்குள்ளே நுழையும்போது தகப்பனாரின் பரிதாபக் குரலை அவன் அறியமாட்டான்! குடியிருக்கும் வீடு அடமானம் வைக்கப்பட்டது என்பது மகனுக்குத் தெரியாது!

"அதைப்போல, இந்தியாவில் மக்கள் படும் கஷ்டநஷ்டம் நேருவுக்குத் தெரிய முடியாது.

"கடை வீதிக்குப் போனால் விலைவாசி ஏற்றம்! தொழில் செய்யலாமென்று வேலை தேடிச் சென்றால், எங்கும் வேலை காலி இல்லை என்று போர்டுகள் தொங்குகின்றன! பிள்ளைக்குப் பள்ளிச் சம்பளம் கட்ட பணமில்லாத திண்டாட்டம்! நாளெல்லாம் சோகரேகை படர்ந்து, துக்கம் கப்பிய முகத்துடன் தகப்பன் படும் கஷ்டத்தை பள்ளிப் பிள்ளைகள் தெரிந்து கொள்வதில்லை; வீடும் பள்ளியும்தான் அவர்களுக்குத் தெரியும!"

இலங்கை தி. மு. க.-சமூக சீர்திருத்த மாநாடு

க. அன்பழகன் எ. எல். ஏ., வாழ்த்துச் செய்தி

"இலங்கை தி. மு. க. சார்பில் யாழ்ப்பாண நகரில் 28, 29—12—57 நாட்களில் கூடும் சமூக சீர்திருத்த மாநாட்டில் கலந்துகொள்ள விரும்பியும்—அனுமதி கிடைக்காததால் இயலாத நிலைக்கு ஆளாகியுள்ளேன்.

"எனினும், நானோ மற்ற நண்பர்களோ தமிழ் நாட்டினின்றும் அங்குவர இயலாமைக்காக மாநாட்டினை நடத்தும் கழகத் தோழர்கள் சலிப்படையாமல், உறுதியுடனும ஊக்கத்துடனும் பணியாற்ற விரும்புகிறேன்

"மாநாடு வெற்றிகரமாக நடைபெற்று, இலங்கைவாழ் தமிழ் மக்களும், தமிழ் இனமும், முன்னேற்றமும் நல்வாழ்வுக்கான உரிமைகளும் எய்த வேண்டுமென விரும்பி எனது உளமார்ந்த வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று, தோழர் க. அன்பழகன் தெரிவித்துக் கொள்கிறார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட உ. பி.-யைச் சேர்ந்த வி. டி. என். சாகி என்ற பேராசிரியர், 'இந்திதான்வேண்டும்' என்று ஓலமிட்டிருக்கிறார்.

"ஒரு இந்திய மொழி—அதாவது இந்தி—ஆட்சி மொழியாகாவிட்டால், நிர்வாகக் காரியங்கள் குட்டி பூர்ஷுவா ஆதிக்கத்திலுள்ள மக்களின் மட்டத்திற்கு வரவே செய்யாது" என்று அவர் கூச்சலிட்டாராம்!

மேடைதளவாய் டி. குமாரசாமி மறைவு

நெல்லை மாவட்டத்தில் மிகப பிரபலமான 'தளவாய்' குடும்பத்தைச் சேர்ந்தவரும், அந்த நாள் நீதிக்கட்சிப் பிரமுகருமான திரு. மேடைதளவாய் டி. குமாரசாமி (முதலியார்) அவர்கள் தம் 61-வது வயதில் 25—12—57 காலை இயற்கை யெய்தினார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

காலஞ்சென்ற திரு. குமாரசாமி அவர்கள், சென்னை மேல்சபை உறுப்பினராக இருந்தும் மாகில கூட்டுறவு பாங்கியின் தலைவராகவும், மற்றும பல பொது நிறுவனங்களில் முக்கிய அங்கம வகித்தும் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வந்தவர்.

நீதிக்கட்சிக்கு அவர் உற்ற துணைவர்களில் ஒருவராக இருந்து அரும்பணியாற்றியவர்.

அன்னார் மறைவு கேட்டு ஏராளமான மக்கள் வந்து தங்கள் கடைசி மரியாதையைத் தெரிவித்துக்கொண்டதுடன், சவ ஊர்வலத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

அன்னாரின் மறைவால் துயருறும அனைவருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபம் உரியதாகுக. (ஆ-ர்)

சென்னை—தூளை நகர இளைஞர் கழகம்

28-12-57 மாலை 6-30 மணிக்கு. கழகப் பணிமனையில் (10, மாணிக்கச் செட்டித் தெரு), திரு. எஸ். எம். பாசில், 'வானமண்டலப் பயணம்' என்பதுபற்றிப் பேசுவார்.

தமிழ்நாடு கிராம அதிகாரிகள் சங்க மாநாடு

29—12—57 காலை 10 மணி அளவில், மதுரை டவுன் வடக்கு வெளி வீதியிலுள்ள சென்ட்ரல் கோவாபரேட்டிவ் பாங்கியின மாடியில், திரு. பி. டி. இராசன் எம். எல். சி., அவர்கள் தலைமையில் நடைபெறும; திரு சி. ஆர். சீனிவாசன் மாநாட்டைத் திறந்து வைப்பார்; திரு. டி. புருஷோத்தம் எம. எல். சி., கொடியேற்றி வைப்பார்.

தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியர்கள 3-வது மாநாடு

29—12—57 பிற்பகல 2-மணியளவில், சென்னை—வண்ணை தியாகராயர் கல்லூரி ஹாலில் பேராசிரியர் எம். கே. சண்முகம் அவர்கள் தலைமையில் மேற்படி மாநாடு நடைபெறும; சென்னை சட்டசபை சபாநாயகர் டாக்டர் யூ கிருஷ்ணாராவ் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைப்பார்; மாநிலக் கல்வி இயக்குநர் திரு. என் டி. சுந்தரவடிவேலு, திரு. எஸ். பி. ஆதித்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்று காலை 9-மணிமுதல 12-மணி வரையில் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும்.

சிதம்பரம் வட்ட தி. மு. க. தோழர்களுக்கு:

"29—12—57 மாலை 3 மணி அளவில், சிதம்பரம் நகராண்மைக் கழக பிரயாணிகள் விடுதியில் தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில், பூதவராயன்பேட்டையில் கொலை செய்யப்பட்ட விவசாய முன்னேற்ற சங்க உறுப்பினர் தோழர் ஆறுமுகம் அவர்களின் குடும்பத்தாருக்கு, உதவி செய்வது பற்றிய ஆலோசனைக் கூட்டம நடைபெறும் ; அவ்வமயம் சிதம்பரம் வட்டத்திலுள்ள எல்லா தி. மு. கழகக் கிளைகளின் செயலாளர்கள, செயற் குழுவினர், மற்றும் கழகப் பணியில் முன்னிருந்து பணியாற்றும் அனைவரும் வந்திருந்து தங்கள் தங்கள் கருத்துக்களைத் தந்துதவ வேண்டுகிறேன்"

என்று, சிதம்பரம் நகர தி. மு. கழகச் செயலாளர் இரா. சக்கரவர்த்தி அவர்கள் அறிவிக்கிறார்.

குடந்தை பன்னீர்செல்வம் படிப்பக உறுப்பினர்களுக்கு;

29-12-57 காலை 10 மணிக்கு, மேற்படி படிப்பக மனையில், படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, "பொங்கல் விழா' பற்றி ஆலோசிக்கப்படும்.

பெங்களூர்—ஸ்ரீராமபுரம் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

29-12-57 காலை 10 மணிக்கு கழகப் பணிமனையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

தே. கல்லுப்பட்டி :
29—12—57 மாலை 6½ மணிக்கு
தலைவர் : சுப்பிரமணியன்
பேசுபவர் :
காஞ்சி. கல்யாணசுந்தரம்

★

பேரையூர் :
அரசமரத் திடலில்
29—12—57 இரவு 7 மணிக்கு
தலைவர் : கு. செல்வம்
பேசுவோர் :
எம். மேத்தா எம்.சி.
ஆர். கே. துரை
ஏ. எம். அனீபா

★

பெருங்காடு :
என். எஸ். கே. திடலில்
29—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : நா. மாரிமுத்து
பேசுவோர் :
முக. மீரா, ஆ. துரையரசன்
மு. சீனிவாசன், கருணா
அரு. குமாரசாமி
இசை : பந்தா, மஜீத்

சென்னை 1—வது வட்ட தி மு. க. பொது உறுப்பினர்கட்கு:

28—12—57 இரவு 7-30 மணியளவில், கழகப் பணிமனையில் (எண் 27, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தொண்டையார் பேட்டை), கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

குனியமுத்தூர் அன்பழகன் படிப்பக உறுப்பினர்களுக்கு

29—12—57 காலை 9 மணி அளவில் படிப்பகக் கட்டிடத்தில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சொற்பயிற்சித் துவக்க விழாக் கூட்டம்

28-12-57 மாலை 6-30 மணிக்கு, சென்னை-சேத்துப்பட்டு அப்பாசாமி முதலித் தெருவில் டாக்டர் அம்பேத்கார் நினைவு மன்றத்தின் சார்பில் சொற்பயிற்சித் துவக்க விழா தோழர் இரா. சம்பந்தம் தலைமையில் நடைபெறும். மா. செங்குட்டுவன், இரகுநாதன், முருகேசனார், மு. சு மணி, பெ கலைச்செல்வி, ஆ. தமிழ்ச்செல்வி ஆகியோர் பேசுவர்; இன்னிசை; சேலம்-சீனிவாசன்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

29—12—57 மாலை 6 மணிக்கு, நாகை அழகிரி சொற்பயிற்சி மன்றச் சார்பில், நகர தி. மு. கழகக் கட்டிடத்தில், 'தமிழகத்தில் இந்தி' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

29—12—57 காலை 9 மணிக்கு, கும்பகோணம் 23-வது வட்ட தி. மு க. சார்பில், பன்னீர்செல்வம் படிப்பகத்தில் (கும்பேசுவரன் தெற்குவீதி), வள்ளுவர் சொற்பயிற்சி மன்றத்தினர் 'தமிழர் திருநாள்' எனும் தலைப்பில் பேசுவர்.

* * *

28—12—57 மாலை 6 மணிக்கு, சென்னை 11-வது வட்ட என். எஸ். கே. நினைவு மன்றத்தில் (எண் 64, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தியால்பேட்டை), தோழர் கு. வேலன் தலைமையில், 'தமிழகண்மை' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

28—12—57 இரவு 8 மணிக்கு, பழனிநகர 11-வது வட்ட மஜீத் மன்றத்தில், தோழர் நூர் முகம்மது தலைமையில், 'வடநாடு—தென்னாடு' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தளகர்த்தர் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, ஞானியப்ப செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் 'இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.